2022-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 29.07.2022-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்

பொருள் : 1

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் திரு.மெ.சரவணகுமார் அவர்களின் ஜீலை 2022 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.528/2022/சி1)

தீர்மானம் எண் : 114 பதிவு செய்யப்பட்டது. நாள் 29.07.2022

பொருள் : 2

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கச்சேரி வீதி சத்திரக்கடை எண்.19-ஐ திரு.ஷேக்அப்துல்வாஹித் என்பவருக்கு 01.08.2021 முதல் 31.07.2024 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை ரூ.17500/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் கொரோனா காலத்தில் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 14.07.2022 தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட கச்சேரி வீதி சத்திரக்கடை எண்.19-ன் 01.08.2021 முதல் 31.07.2024 வரை காலத்திற்கு மூன்றாண்டு குத்தகை எடுத்து நடத்தி வந்து உள்ளார். தற்போது தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் கடையை நகராட்சி வசம் ஒப்படைக்க விருப்ப கடிதம் வழங்கியுள்ளார். அன்னாரின் உரிமம் 30.07.2024 வரை உள்ளதால் பொது ஏலம் நிபந்தனைகளின் படி ஏல காலமுடிவதற்கு முன் கடை ஒப்படைப்பதால் அவரின் ஏல டெபாசிட் தொகையில் நிலுவை தொகைக்கு சரிகட்டவும் மீதி நிலுவை வாடகைக்கு வழக்கு தொடரவும் மன்றம் அனுமதித்தும், மேலும் அரசு ஆணை 92 ன் படி பொது ஏல நிபந்தனைக்கு உட்ப்பட்டு ஒப்படைக்கும் தேதியில் மூன்றாண்டுகாலத்திற்கு பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0534/2022/அ3)

தீர்மானம் எண் : 115 அங்கீகரிக்கப்பட்டது நாள் 29.07.2022

பொருள் : 3

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.6-ஐ திரு.கே.தேவராஜ் என்பவருக்கு 01.07.2019 முதல் 31.06.2022 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை ரூ.6,100/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனது தொழில் நஷ்டம் காரணத்தாலும், கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 11.06.2022 ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.-6 -ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 23.06.2022ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.6-ன் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 0176/2022/அ3)

தீர்மானம் எண் : 116 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022

**பொருள் : 4**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.7 -ஐ திரு.கே.தேவராஜ் என்பவருக்கு 01.07.2019 முதல் 30.06.2022 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை ரூ.6,100/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனது தொழில் நஷ்டம் காரணத்தாலும், கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 28.05.2022 ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மேற்க்கண்ட கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.7 -ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 23.06.2022ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.7-ன் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு அரசாணை எண்.92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 404/2022/அ3)

**தீர்மானம் எண் : 117 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

**பொருள் : 5**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடைகளுக்கான மத்திய கலால் துறையின் சேவை வரிகள் மாத வாடகையுடன் சேர்த்து வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சேவை வரி தொகையினை (GST) உரிய தலைப்பில் மாதம் ஒரு முறை PM ASSOCIATES & TAX CONSULTANCY SERVICES, SATHYAMANGALAM என்ற நிறுவனத்தால் GST MONTHLY RETURN செய்யப்பட்டு வருகிறது. அதன்படி MONTHLY RETURN செய்வதற்கான கட்டணம் மேற்கண்ட நிறுவனத்திற்க்கு 2022-2023 -ஆம் ஆண்டிற்கு வழங்க ஆகும் உத்தேச செலவினமாக ரூ.15,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மேற்கன்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் : 118 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

**பொருள் : 6**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.17-ஐ திருமதி.விஜயாகண்ணன் என்பவருக்கு 01.10.2020 முதல் 31.09.2023 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை ரூ.8,350/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், கொரனா நோய் தடுப்பு காரணத்தால் கடை பூட்டிய நிலையில் உள்ளதாலும் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 05.04.2022 ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மேற்க்கண்ட கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.17 -ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 23.06.2022ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் கச்சேரி வீதி சத்திரக் கடை எண்.17-ன் உரிமம் காலம் முடிவடையாத நிலையில் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு அரசாணை எண்.92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 534/2022/அ3)

**தீர்மானம் எண் : 119 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 7

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண். 22 திரு.அஜய்புவனேஷ் என்பவருக்கு 15.09.2021 முதல் 30.09.2024 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை 5,000/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் குடும்ப சூழ்நிலை காரணத்தால் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 18.04.2022 ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசாணை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட பேருந்து நிலைய கடை எண். 22 -ன் உரிமதாரர் தற்போது குடும்ப சூழ்நிலை காரணத்தால் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 23.06.2022-ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் பேருந்து நிலைய கடை எண். 22 -ன் உரிமம் காலம் முடிவடைந்த நிலையில் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு அரசாணை எண்.92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 689/2021/அ3)

**தீர்மானம் எண் : 120 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண்.5-ஐ திரு.மூர்த்தி என்பவருக்கு 01.06.2021 முதல் 30.05.2024 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை ரூ.9315/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் கொரோனா காலத்தில் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 07.06.2022 ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசாணை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட பழைய பேருந்து நிலைய கடை எண். 5-ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 23.06.2022ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் பழைய பேருந்து நிலைய கடை எண்.05-ன் உரிமம் காலம் முடிவடையாத நிலையில் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 689/2021/அ3)

**தீர்மானம் எண் : 121 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் அருகில் ஆடுவதை சாலை உள்ளது. அதன் உரிமக்காலம் 31.07.2022 உடன் முடிவடைவதால் அரசு ஆணை எண். 181 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்ட கோட்டுவீராம்பாளையம், திருவள்ளுவர் திடல் அருகில் ஆடுவதை சாலை கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மூன்றாண்டு உரிம காலம் 31.07.2022 தேதியுடன் முடிவடைவதால் அரசாணை எண். 181 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு புதிய இனமாக பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 1200/2020/அ3)

**தீர்மானம் எண் : 122 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 10

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்.65-ஐ திரு.பி.வேலுச்சாமி என்பவருக்கு 01.10.2019 முதல் 30.09.2022 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை ரூ.11,559/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் உடல் நிலை சரியில்லாத காரணத்தால், கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 14.07.2022 ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசாணை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மேற்க்கண்ட பழைய பேருந்து நிலைய கடை எண். 65-ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 18.07.2022ஆம் தேதி குறிப்பு வழங்கப்பட்டதின் பேரில் புதிய பேருந்து நிலைய கடை எண்.65 -ன் உரிமம் காலம் முடிவடையாத நிலையில் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.1545/2022/அ3

**தீர்மானம் எண் : 123 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சியில் நகர் மன்ற தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் பழுது ஏற்பட்டு அடிக்கடி வாகனம் இயக்க முடியாமல் பாதி வழியிலே நின்று விடுகிறது, எனவும், மேற்கண்ட பழுதுகள் சரி செய்யவும் ஆயில் சர்வீஸ் செய்யப்பட வேண்டும் என்று ஈப்பு வாகன ஒட்டுநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இப்பொருள் மீது அவசரம் அவசியம் கருதியும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாகன சர்வீஸ் செய்ய உத்தேச செலவின தொகை ரூ.0.40 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) மன்ற அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியல் சேர்த்து கொள்ளலாம்.
3) நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நிறுவனத்திற்கு தொகை வழங்கப்பட்டமைக்கு நகர் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1367/2022/இ1)

**தீர்மானம் எண் : 124 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 12

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20800/2021/UPA-1 Dated.03.06.2022 இல் NULM - (SUSV) திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை, சர்வே பணி செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்க கோரியுள்ளார்கள். அதன்படி 08.07.2022 அன்று NULM-SUSV - Conduct of Survey on Street Vendors, preparation of bilingual ID Cards, Certificate of Vending, City Street Vending Plan (CSVP), Detailed Implementation Plan (DIP) and MIS Solution under Support to Urban Street Vendors (SUSV) under NULM in Sathyamangalam Municipality பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பூர்த்தி செய்யப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | Mirifical Careers Pvt Ltd<br>#12 A Second Floor, KK Building,<br>T Nagar, Ramanathapuram, Coimbatore | ரூ.3,70,700/- (ஒரு சாலையோர வியாபாரியை கணக்கெடுக்க ரூ.700/- மற்றும் இதர பணியாளர்கள் ஊதியம்) |
| 2 | Bharathi HR Consultancy<br>#8 South Canal Bank Road<br>Mandav eli, Chennai -600028 | ரூ.4,20,850/-(ஒரு சாலையோர வியாபாரியை கணக்கெடுக்க ரூ.850/- மற்றும் இதர பணியாளர்கள் ஊதியம்) |

மேற்காணும் ஒப்பு நோக்கு பட்டியலின் அடிப்படையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Mirifical Careers Pvt Ltd ,#12 A Second Floor, KK Building,TNagar Ramanathapuram, Coimbatore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Mirifical Careers Pvt Ltd #12 A Second Floor, KKBuilding, TNagar, Ramanathapuram, Coimbatore ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

(ந.க.எண்.1188/2022/இ1)

**தீர்மானம் எண் : 125 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட சத்தி -அத்தாணி சாலையில் அமைந்துள்ள தினசரி மார்க்கெட் இடிக்கப்பட்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிதாக தினசரி மார்க்கெட் மேம்பாடு பணி நடைபெற்று வருகிறது. இந்த வளாகத்தில் ஏற்கனவே உள்ள கட்டிடம் இடிக்கும்போது பயன்படுத்த முடியாமல் உள்ள இரும்பு ஆங்கிள், இரும்பு கம்பிகள், மர கட்டைகள் தலைமை நீரேற்று நிலையத்தில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. இப்பொருள் ஏலம் கோரி நகராட்சிக்கு வருவாய் ஈட்டவும், மேலும், திருவள்ளுவர் திடல் உரம் தயாரிக்கும் பணிக்கு இருப்பு அறை கட்டப்பட்டு வருகிறது. இப்பணி மேற்கொள்ளும்போது மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. மேலும் தினசரி மார்க்கெட்டில் உள்ள இரண்டு மரங்கள் அகற்றவும், அதனை ஏலம் வைக்கவும் மற்றும் இதர பொருட்கள் தலைமை நீரேற்று நிலையத்தில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவைகள் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழைய பொருட்கள் பொது ஏலம் கோர நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.796/2021/இ1)

**தீர்மானம் எண் : 126 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN36AX0783 அடிக்கடி பழுது ஏற்பட்டு வாகனம் ஓட்ட முடியாமல் உள்ளதாக ஈப்பு வாகன ஓட்டுநர் தனது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். மேலும், ஈப்பு வாகனம் சரி செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் CAI Auto Industries, Coimbatore வாகனம் பழுது சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.0.75 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.
3)நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஈப்பு வாகனம் சரி செய்தமைக்கு தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2706/2017/இ1)

**தீர்மானம் எண் : 127 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட பேருந்து நிலையம் “பி” பிரிவுக்கான அங்கீகாரம் புதுப்பிக்க பேருந்து நிலையத்தில் குடிநீர் வசதி, சுற்று சுவர் வர்ணம் பூசுதல், சாலை வசதிகள், மின் விளக்குகள் எரியும் நிலையில் வைத்தல் மற்றும் இதர குறைபாடுகள் நிவர்த்தி செய்து மோட்டார் வாகன ஆய்வாளார் நிலை -1 அலுவலர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ளும் போது பராமரிப்பு பணி மேற்கொண்டு பேருந்து நிலையம் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என ஆணையாளர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. எனவே, இப்பணி அவசர அவசியம் கருதி பேருந்து நிலையத்தில் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.50,000/-ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மேலும்,இப்பணியின் முக்கியத்துவம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.15 இல் (Section 15) மேற்கொள்ள நகர் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.15 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியல் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந.க.எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 128 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 16

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட அத்தாணி நெடுஞ்சாலை இருந்து பிரிந்து செல்லும் (திப்புசுல்தான் சாலை) கோட்டுவீராம்பாளையம் வரை பைபாஸ் சாலை செல்கிறது. இந்த சாலை வழியாக மைசூர், பண்ணாரி மற்றும் இதர வெளியூருகளுக்கு தினசரி நூற்றுக்கு மேலான வாகனங்கள் செல்கிறது. தற்பொழுது மழை காலம் என்பதால் மழை நீர் தேங்கி சாலை குண்டும் குழியுமாக காணப்படுகிறது. இச்சாலையை பயன்படுத்துவோர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். மேலும், கனரக வாகனங்கள் அடிக்கடி பழுதுடைந்து சாலையில் வாகனம் குழிக்குள் இறங்கி விடுகிறது. பருவ மழையால் சேதம் அடைந்த சாலை போர்கால அடிப்படையில் செப்பணியிட உத்தேச செலவினம் **ரூ.1.50 இலட்சம்** ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.
3)இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று டெண்டர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.418/22/இ1)

**தீர்மானம் எண் : 129 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சியில் வார்டுகள் 27 உள்ளது. அனைத்து வார்டுகளில் உள்ள பொது பயன்பாட்டிற்கு ஆழ்துளை கிணறுகள் சிறுமின் விசைப்புகள் 101 எண்ணிக்கை நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மோட்டார்கள் அவ்வப்பொழுது பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். மேற்படி பழுதுகள் அவ்வப்போது பழுது நீக்கம் செய்ய தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான முறையில் தண்ணீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே, அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மின் இணைப்பு மற்றும் மின் மோட்டார் starter பழுதுகள் மோட்டர் பம்புகள் கேபிள் ஒயிரிங் இரும்பு மற்றும் பிவிசி பைப்புகள் மாற்றம் செய்யவும் பொருள் வாங்கவும் பழுது நீக்கம் செய்யப்பட்ட மின் மோட்டார்கள் அதே இடத்தில் பொருத்தவும் புதிய மின் மோட்டார்கள் தேவைப்படின் வாங்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.9.95 இலட்சத்தில் மேற்கொள்ளவும், இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும்,2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந.க.எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 130 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 18

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட குடிநீரேற்றம் செய்யும் நிலையத்தில் கோம்புபள்ளம் (கோட்டுவீராம்பாளையம்) ரங்கசமுத்திரம் நீரேற்று நிலையம் இரண்டு நிலையங்களில் இருந்து மூன்று மேல்நிலைத்தொட்டிகள் திருவள்ளுவர் திடல் - 15.00 ல.லி, ரங்கசமுத்திரம் -7.75 ல.லி., கட்டபொம்மன் நகர் -10.00 ல.லி ஆகியவற்றில் இருந்து நகராட்சிக்கு உட்பட்ட 27 வார்டுகளுக்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பிரதான குழாய்கள், பகிர்மான குழாய்கள் அமைத்து நீண்ட வருடங்கள் ஆகி விட்டபடியால் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகி பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதில் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும், பிரதான குழாய்கள், பகிர்மான குழாய்கள், உடைப்பு ஏற்பட்டு சரி

செய்ய தனித்தனியாக ஒப்புந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளதால் காலதாமதம் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, குடிநீர் பணியாக இருப்பதால் அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு உத்தேச மதிப்பீடு ரூ.9.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், 2022-23 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந.க.எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 131 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 19

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் மூ.மு.எண். 44923/99/எப்.1 நாள்.06.12.1999-இன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு குழாய் ஆய்வாளர் -1, தலைமையிட உதவியாளர் -2, வடிகட்டி படுகை இயக்குபவர் -4 ஆகிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு தொடர்பணி நீட்டிப்பு ஆணை பெறப்பட்டு வருகிறது. அதன்படி, அனுமதி காலம் 30.09.2022 உடன் முடிவடைவதால் அதனை 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

குழாய் ஆய்வாளர் -1, வடிகட்டி படுகை இயக்குபவர் -4, தலைமையிட உதவியாளர் - 2 ஆகிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு 01.10.2021 முதல் 30.09.2022 வரை மேற்கண்ட பணியிடங்களுக்கு காலம் நீட்டிப்பு செய்து அனுமதி பெறப்பட்டு வருகிறது. மேற்படி அனுமதி காலம் 30.09.2022 உடன் முடிவடைவதாலும் மொத்தம் உள்ள 7 பணியிடங்களில் 4 பணியிடங்கள் காலியாக உள்ளதாலும் மீதமுள்ள 3 பணியாளர்களைக் கொண்டு இரண்டாம் நிலை நகராட்சிக்கு தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் மட்டுமே உள்ளதாலும் தற்பொழுது 22.05.1998 முதல் முதல்நிலை நகராட்சியாக செயல்பட்டு வருவதாலும் நகர்புறங்களில் குடியிருப்புகள் அதிகமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள நிலையிலும் மேற்படி தலைமை நீரேற்று நிலைய பணிக்கும் மற்றும் 27 வார்டு பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கும் மற்றும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி காவலர் பணிக்கும் போதுமான பணியிடங்கள் இல்லாததால் இப்பணியாளர்களைக் கொண்டு பராமரிப்பு செய்து வருவதால் இதனை 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள கோரலாம் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 62/2013/சி1)

**தீர்மானம் எண் : 132 அங்கீகரிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 20

சத்தியமங்கலம் நகராட்சி மாதந்தோறும் நடைபெறும் நகர்மன்ற கூட்டத்திற்கு கூட்டப்பொருள் தயார் செய்யப்பட்டு நகர்மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க ஏதுவாக கூட்டப்பொருள் நகல் எடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000/- ஐ பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 617/2022/சி1)

**தீர்மானம் எண் : 133 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 21

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் மூ.மு.எண். 14547/2004/எப்.4 நாள். 21.02.2005 ன்படியும் அரசாணை எண். 285 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 05.11.1996 இன்படியும் இந்நகராட்சிக்கு மின் விளக்கு பராமரிப்பு பணிக்காக மின் பணியாளர் நிலை - 2, பணியிடம் -1 தோற்றுவிக்கப்பட்டு தொடர்பான நீட்டிப்பு ஆணை பெறப்பட்டு வருகிறது. அதன்படி அனுமதி காலம் 30.09.2022 உடன் முடிவடைவதால் அதனை 01.10.22 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மின் பணியாளர் நிலை -2 பணியிடம் -1 இந்நகராட்சி 27 வார்டுகளில் உள்ள மின் மோட்டார் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம், குடிநீர் நீரேற்று நிலைய மின் மோட்டார் பராமரிப்பு பணிக்கு அவசியம் தேவைப்படுவதால், இப்பணியிடத்தை நிரந்தரமாக வைத்துக் கொள்ள கோரலாம் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 60/2013/சி1)

**தீர்மானம் எண் : 134 அங்கீகரிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 22

நகராட்சி நிர்வாக இயக்குனரகம், சென்னை அவர்களின் R.O.C.266888/2018/EA1 சுற்றிக்கையின்படி தெரிவித்துள்ளபடி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து இடங்களிலும் (Septic Tanker) நச்சு தொட்டிகளை சுத்தம் செய்யப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் தனியார் கழிவுநீர் அகற்றும் ஊர்திகளை இந்நகராட்சியில் பதிவு செய்திடவும்.

மேலும் அகற்றப்படும் கழிவுநீரினை இந்நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள (STP) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேர்த்து கழிவு நீர் சுத்திகரிப்பு செய்திடவும் அதற்கான உரிமம் வழங்கிட வேண்டி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வாகனங்களை இந்நகராட்சி பதிவு செய்து உரிமம் வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

( ந. க. எண். 1100/2019/எச். 1)

**தீர்மானம் எண் : 135 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 23

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மைப் பணியாளர்களின் காலிப் பணியிடத்தினை பூர்த்தி செய்திடும் வகையில் மாவட்ட ஆட்சியர் அவ்வப்போது நிர்ணயிக்கும் ஊதிய விகிதத்தில் 127 தூய்மைப் பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் நிரப்பிக் கொள்ளவும், மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மன்ற அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் அலுவலகத்திற்கு முன்மொழிவு அனுப்பியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண்.1350/2022/எச்.1)

**தீர்மானம் எண் : 136 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 24

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபரணங்கள் கொள்முதல் செய்திட இந்நகர்மன்ற தீர்மான எண்.108 நாள்.28.06.2022 அனுமதி பெறப்பட்டு 14.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு, அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினி | அளவு | A to Z Enterprise, Pudhivakkam RS. | Sri Har Auto Industrial Parts, Koduvancheri Rs. |
|---|---|---|---|---|
| 1 | பீளிச்சிங் பவுடர் | 1 kg | 40 | 42 |
| 2 | சுண்ணாம்பு தூள் | 1 kg | 9 | 11 |
| 3 | லைசால் | 1 Lt | 200 | 220 |
| 4 | கருப்பு பினாயில் | 1 Lt | 110 | 120 |
| 5 | முகக்கவசம் | 1 No | 4 | 8 |
| 6 | கையுறை | 1 No | 20 | 28 |
| 7 | முழு உடல் கவசம் | 1 No | 273 | 287 |
| 8 | டாய்லட் ஆசிட் | 1 No | 150 | 160 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய A to Z Enterprise, Pudhivakkam ஒப்பந்தப்புள்ளி ஏற்கவும், அவ்வப்போது தேவைப்படும் உபரகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் பெற்றுக் கொள்ளவும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய A to Z Enterprise, Pudhivakkam ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 137 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 25

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் மொத்த இரண்டு ஈப்பு வாகனங்கள் உள்ளன. இதில் TN36AZ0783, TN36X8111 அலுவலக பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வாகனங்கள் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகர் மன்ற தலைவர் அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நகர் மன்றத் தலைவர் அவர்கள் பயன்படுத்தப்பட்ட TN 36 X 8111 ஈப்பு வாகனம் 2008 இல்

வாங்கப்பட்டதாகும். இந்த வாகனம் நகராட்சி நிர்வாக மன்டல இயக்குநர், திருப்பூர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு ஆகிய இடங்களுக்கு சென்று வர வாகனம் இயக்க மிகவும் சிரமமாக உள்ளது. எனவே இந்த வாகனத்தை இந்நகராட்சி பொறியாளர் அவர்கள் பாதாள சாக்கடை திட்டப்பணிகள், சாலை பணிகள், மழை நீர் வடிகால் பணிகள் நகராட்சி பகுதி முழுவதும் கவனிக்கவும், குடிநீர் விநியோக பணிகள் மேலாய்வு செய்யவும் பயன்படுத்தப்படும். எனவே, இந்நகர் மன்ற தலைவர் அவர்களுக்கு அலுவலக பயன்பாட்டிற்கு ஒரு ஸ்கார்ப்பியோ வாகனம் கொள்முதல் செய்யப்பட்டது. தற்பொழுது இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் வாகன ஓட்டுநர் பணியிடம் ஒன்று மட்டுமே உள்ளது. இப்பணியிடத்திற்கு ஒரு ஓட்டுநர் நிரப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு ஈப்பு வாகனத்திற்கு போதிய ஓட்டுநர் இல்லாததால் வெளி ஆட்கள் (Outsourcing) மூலம் ஓட்டுநர் பணியிடம் அமர்த்தவும் அவருக்கு மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டு விலை விகிதத்தில் அமர்த்தி கொள்ளவும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இரண்டு ஓட்டுநர் தற்காலிமாக வெளிஆட்கள் (Outsourcing) மூலம் எடுத்துக்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.579/2022/இ1)

**தீர்மானம் எண் : 138 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 26

சத்தியமங்கலம் நகராட்சி கோம்புபள்ளம குடிநீர் நீரேற்று நிலையத்தில் உள்ள ஆற்று நீர்ரேற்றம் டர்பைன் பம்ப்செட் 35HP மின்மோட்டார் பழுதடைந்து உள்ளது.இம்மோட்டார் பழுதானதால் பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் பொது மக்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. எனவே உடனடியாக அவசர அவசியத்தை முன்னிட்டு இம்மோட்டார் பழுது நீக்கம் செய்து பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் கிடைக்க ஆவண செய்யுமாறு கோம்புபள்ளம் நிலைய மின் பணியாளர் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி மோட்டார் பழுது நீக்கம் செய்ய **ரூ.2.00 இலட்சம்** செலவாகும். இச்செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 139 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 27

சத்தியமங்கலம் நகராட்சி ரங்கசமுத்திரம் தலைமை குடிநீர்ரேற்று நிலையம் ஆற்று நீர்ரேற்றும் Submersible Motor 20HP, சுத்திகரிக்கப்பட்ட குடிநீரேற்றம் Submersible Motor 20HP –ம் பழுதானதால் வார்டு எண் 21 முதல் 27 வரை உள்ள குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டு பொது மக்களுக்கு தேவைக்கு ஏற்ப குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே இந்த இரண்டு Submersible Motor 20HP பழுது நீக்கம் செய்து பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யவும், குடிநீர் பணி என்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு உடனடியாக இவ்விரண்டு மோட்டாரை பழுது நீக்கம் செய்ய ஆவண செய்யுமாறும் மேலும் இப்பணிக்கு ரூ.1,20,000/- ஆகும். இச்செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 140 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 28

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.15 இல் சுண்ணாம்புகாரர் வீதியில் வடிகால் வசதி இல்லாததால் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் சாலையில் தேங்கி நின்று பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல முடியாமல் உள்ளது.மேலும், தேங்கி இருக்கும் கழிவு நீரால் அடிக்கடி காய்ச்சல் ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இப்பகுதியின் பொதுமக்கள் நீண்ட நாள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். எனவே இப்பகுதியில் பழுதடைந்த சிமெண்ட் சாலை மற்றும் வடிகால் பழுது பார்க்க ரூ.0.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 141 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 29

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட திப்புசுல்தான் ரோடு, வடக்கு பேட்டை, சத்யா தியேட்டர் ரோடு மிகவும் பழுதடைந்து குண்டும், குழியுமாக வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமமாகவும் வாகனம் விபத்து அடிக்கடி ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் சாலைகள் சீர் செய்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை கடிதம் வழங்கியுள்ளார்கள். இப்பொருள் மீது சிறப்பினமாக கருதி சத்யா தியேட்டர் முதல் கோம்புபள்ளம் சந்திப்பு வரை தார் சாலை பேட்ச் அமைக்கும் பணிக்கும் பழுது பார்க்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 142 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 30

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.16 பத்திரகாளியம்மன் புது வீதியில் ஆழ்குழாய் கிணற்றில் மின் மோட்டார் சிக்கி தண்ணீர் எடுக்க முடியாமல் உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய முடியாமல் உள்ளது. இதனை உடனே சரி செய்து தருமாறு 16-வது வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இப்பொருள் மீது சிறப்பினமாக கருதி மேற்கண்ட ஆழ்குழாய் கிணற்றினை பிளீச்சிங் (Bleaching) செய்தும் மற்றும் குடிநீர் வசதிகள் செய்ய மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 143 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 31

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட தபால் ஆபீஸ் ரோடு மிகவும் பழுதடைந்து குண்டும், குழியுமாக வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமமாகவும் வாகனம் விபத்து அடிக்கடி ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் சாலைகள் சீர் செய்து தருமாறு பொது மக்கள் புகார் மனு வழங்கியுள்ளார்கள். இப்பொருள் மீது சிறப்பினமாக கருதி சியமளா மருத்துவமனை முதல் பண்ணாரி ரோடு சந்திப்பு வரை தார்

சாலை பேட்ச் ஒர்க் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 144 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

பொருள் : 32

இந்நகர் மன்ற தீர்மானம் எண். 438 நாள்.30.09.2020 இன்படி பொறியியல் பிரிவில் வெளி ஆட்கள் மூலம் குடிநீர் மற்றும் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.9.67 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி கோரப்பட்டு 10.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s.Vino Constructions Contractor, Bhavani Sagar ஒப்பந்ததாராருக்கு 04.01.2021 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு கடந்த 04.01.2021 முதல் 31.1.2022 வரை அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள வெளி ஆட்கள் வழங்கியுள்ளார்கள். இப்பணிக்கு மாந்தோறும் பில் பட்டியல்களுக்கு தொகை வழங்கப்பட்டதில் இதுவரை ரூ.9,66,471/- செலவுகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், மூல மதிப்பீட்டில் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தாலும், தற்போது உள்ளாட்சி தேர்தல் நடந்ததால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாதுதாலும், ஒப்பந்தம் பிப்ரவரி முதல் செப்டம்பர் மாதம் வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும், குடிநீர் விநியோக பணிகள் சீராக செயல்படுத்த போதிய பணியாளர் வசதி இல்லாததால் மேலும், அக்டோபர் முதல் மார்ச் 2023 வரை ஒப்பந்த கால நீட்டிப்பு செய்யவும், அதற்குரிய செலவினம் மேற்கொள்ளவும் மேலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகித்தில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)அக்டோபர் 2022 முதல் மார்ச் 2023 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பு செய்தும், அதற்கான செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.992/2020/இ1)

**தீர்மானம் எண் : 145 அனுமதிக்கப்பட்டது நாள் 29.07.2022**

நாள் :27.07.2022

நகர்மன்ற தலைவர்,
சத்தியமங்கலம் நகராட்சி.